*1980இல் குருதேவர் தமது புதிய சீடர் ஒருவருக்கு எழுதிய விரிவான விளக்கங்கள் பல தரும் அஞ்சல் வடிவக் கட்டுரை இந்த மாத வெளியீட்டில் வழங்கப் படுகின்றது. தலைப்பிற்கேற்ப இந்தக் கட்டுரை அனைத்து வகைப்பட்ட அருளுலக ஆர்வலர்களுக்கும், அறிமுகத்தார்களுக்கும், புரிமுகத்தார்களுக்கும் ... சித்தர் நெறியாளராக ஆகிடுவதற்கு வழங்கிடும் அறிவுரைகள் பல கொண்டது. ஆழ்ந்து படித்துப் பயன்பெற்றிடுக.*

# அருளுலக அறிமுக அறிவுரை அஞ்சல்
**(அல்லது)**
# இந்தியாவின் வருங்காலமும் இந்துமதமும்



**ஆசிரியர்**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**

**வெளியிடுபவர்**
**சித்தர் நெறிக் குரவர் நால்வர்**

**பத்தாவது இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாட்டு மலர்**

8, சண்மு
அம்பத்தூ



29/11/80

**பெறுநர்:**
Mr
Ja
14
TR
Pir

**தொடர்பு:** தங்களுடைய அஞ்சல்கள் - குறிப்பாக 28/11/80 அன்று வந்த அஞ்சல்

*குருதேவர் எழுதியதை பலருக்கும் படிக்கக் கொடுக்க வேண்டும் என்பது குருபீட மரபு*

**பொருள்:-**
(i) எம்மால் அடிக்கடி அனைவருக்கும் அஞ்சல் அனுப்ப இயலாது - (a) ஓய்வு இல்லை, (b) பொருள் வசதி இல்லை (c) திருவுள ஒப்புதல்; ஆணை பெற்றுத்தான் யாருக்கும் அஞ்சல் எழுத முடியும் = அதுதான் பீடமரபு.
(ii) யாம் அனுப்பும் அஞ்சலோடு எமது அருவுருவப் படிவம் ஒன்றும் அவசியம் வந்து திரும்பும். = ∴ எமது அஞ்சலைத் தொடுவதும், பார்ப்பதும், படிப்பதும் எம்மோடு நேரில் தொடர்பு கொள்வதையே ஒக்கும் --> இது அடிக்கடி நிகழ்வதால் எமது உடல்நலம் பாதிக்கும். எனவே, அடிக்கடி அஞ்சல் எழுத இயலாது.

(iii) யாம் எந்தச் சித்தரடியானுக்கு அஞ்சல் எழுதினாலும், அஞ்சலைப் பெறுபவர் உடனே விரைந்து அந்த அஞ்சலின் நகலை அனைவருக்கும் அனுப்ப வேண்டும் = இது திருவாணை - குருவாணை. எனவே, அஞ்சலின் நகல் வந்தாலும் அதைத் தமக்கே உரியதாக ஒவ்வொருவரும் ஏற்றுப் **பெற்றுப் போற்றிப் பேணிப் பலருக்கும் காண்பித்துக் களிப்படைய வேண்டும்**. நமது மரபு இது.

(iv) உடனடியாகப் பதில் விரும்புகிறவர்கள்; அடிக்கடி பதில் விரும்புகிறவர்கள் முடிந்தவரை தபால் தலைகள் அல்லது தங்களால் இயன்ற பொருள்.... அனுப்ப வேண்டும். - மரபு இது.

(v) 2-12-80 முதல் 16-12-80 முடிய அம்பத்தூரிலேயே இருப்போம். எனவே, தாங்களும் பிறரும் அஞ்சல் தொடர்பை அம்பத்தூருக்கே கொள்ளுமாறு அறிவிக்கப் படுகிறீர்கள். இவ்வறிவிப்பை உடனே அஞ்சலட்டையில் (post card) அனைவருக்கும் அறிவிக்குமாறு தாங்கள் வேண்டப் படுகிறீர்கள்.

-------------

நண்ப!

*மிகவும் முக்கியமான அறிவுரைகள். மீண்டும் மீண்டும் படித்து உணர்ந்து பின்பற்றுக.*

**நம்மிடமுள்ள அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ஆதரவாளர்கள், ஆர்வலர்கள்... முதலிய அனைவருமே தங்களைப் போல் அளப்பரிய அக்கரையும், ஈடுபாடும், ஈகமும், ஊகமும், உணர்வும், உற்சாகமும்... உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள். எனவே, தாங்கள் நம் வழிவாழும் அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும், போற்ற வேண்டும், ஏற்றிடல் வேண்டும்.**

**புதிதாக உருவாகும் சித்தர் நெறியாளர்கள், ஏற்கனவே உள்ளவர்களிடம் மென்மை, குறிக்கோள், கோட்பாடு, குரு, திரு நம்பிக்கைகள், சடங்குகள்... முதலியவைகளைப் பணிவோடும், கூர்மையோடும், அறிவார்ந்த விருப்பத்தோடும் கேட்டுத் தெரிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்திடல் வேண்டும்.**

**மறையாகப் (secret = இரகசியம்) போற்றிப் பாதுகாக்க வேண்டியவைகளை உயிர் போனாலும் மறையாகவே போற்றிப் பாதுகாக்கும் உரமும், உறுதியும், உட்கிடக்கையும், பண்பாடும், பக்குவமும் பெற்றிடும் சித்தர் நெறியாளர்தான் குருவாலும் திருவாலும் விரைந்து விரும்பி ஏற்று அருள் செய்யப்படுவார்கள். பக்குவமடையாதவர்கள், உறுதியில்லாதவர்கள், உரம் இல்லாதவர்கள், வீரமில்லா ஈகம் (தியாகம்) இல்லாதவர்கள், அவசரக் காரர்கள், ஆத்திரக் காரர்கள்... முதலியோர் ஆண்டுக் கணக்கில் குருவிடம் பழகினாலும் பயனில்லை; அவர்களுக்கு உண்மையான பத்திநிலை, சத்திநிலை, சித்திநிலை கிடைக்கவே கிடைக்காது. இதைப் புரியாதவர்கள் ஒருதலைச் சார்பாக (partiality) செயல்படுவதாகத் தவறாக எண்ணிடுவார்கள். அல்லது அவர்களாகவே பயனற்ற, உண்மையற்ற கற்பனாவாதக் குறைகளைக் குருவிடம் கண்டு குற்றஞ் சாட்டிப் பிரிந்து சென்று விடுவார்கள்.**

**கடவுள் நெறியென்பது கூர்மையான முட்களும், நச்சுக்கூர் கற்களும் மிகுந்த ஒருபாதையே. இதில் குருவின் அன்பு, நம்பிக்கை எனும் காலணிகளைப் பெற்றவர்களால்தான் விரைந்து, துன்பமின்றி, சலிப்பின்றி, களைப்பின்றி நெடுந்தொலைவு நடக்க முடியும்; எல்லையை அடைய முடியும்; பயணத்தின் பயனைத் துய்க்க முடியும்.**

தங்களைப் போலவே பலரும் தங்களுடைய கனவுகளையும், ஞானக் காட்சிகளையும் எமக்கு எழுதி விளக்கமும், பயனும் அருளுமாறு வேண்டுகிறார்கள். எமது காலமும் (கவனமும்) கருத்தும் முயற்சியும் இவற்றில் செலவாகி விடக்கூடாது.

இவற்றை விட முதன்மையான மேலான பல பணிகளில் எமது கருத்தும் முயற்சியும் செலவிடப் படலே உரிய பெரிய பயன்களை நல்கும். அதற்கு நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும்.

அங்கு RECஇல் உள்ள நால்வரும் எமது வழித்தோன்றல்கள், ஞான வாரிசுகள். இவர்களைப் போலவே **எம்மால் உருவாக்கப் படும் ஒவ்வொருவரும் எமது பிரதிநிதிகளாக, பிரதிகளாக, மறுபதிப்புக்களாக, ஒத்த ஆற்றலாளர்களாகவே உருவாக்கப் படுவார்கள் என்பதை உணர்ந்தே அனைவரும் செயல்படல் வேண்டும். அதாவது, எதற்கெடுத்தாலும் என்னையே முழுமுதலாக, முதன்மையாக, தலைமையாக எண்ணிச் செயல்படத் தேவையில்லை. "யாம் யாருக்கும் முதலாளியாகவோ, தலைவராகவோ இருக்க விரும்பவில்லை; அதே நேரத்து யாம் அனைவரையுமே எமக்கு முதலாளியாகவும், தலைவராகவும் கருதுகிறோம்". --- எனவே, எம்மால் உருவாக்கப்படுபவர்கள் அனைவருமே தங்களின் கடமையை, பொறுப்பை, உரிமையை, ஆற்றலை, ... உணர்ந்து சித்தர் நெறியைப் பரப்பிடவும், செயலாக்கிடவும் முற்படல் வேண்டும்.**

நண்ப! எமது பல்வேறு ஆக்கப் பணிகளுக்கிடையில் உங்களுக்கு நேரத்தை ஒதுக்கி, இரவில் 11-50 மணிக்கு மேல் இந்த அஞ்சலைத் தொடர்ந்து எழுதுகிறேன். **நானிப்படி உங்களுக்காக எடுத்துக் கொள்ளும் முயற்சி; தனியொரு நபருக்காக எடுக்கப்படும் முயற்சியல்ல.** நீங்களே, இந்த அஞ்சலை, உங்கள் வாழ்நாள் முழுதும் பல்லாயிரக் கணக்கான நகல்கள் எடுத்து நமது புதிய புதிய நண்பர்களுக்கெல்லாம் அனுப்பிடல் வேண்டும். அப்பொழுதுதான் எமது முயற்சி உரிய பயனைப் பெற்றதாகிடும்.

தங்களைப் போன்று எம்மை நாடி வருபவரெல்லாம்; தெய்வீக அநுபவங்களையே (Divine Experience) பெரிதும் விரும்புகிறார்கள்; நம்புகிறார்கள்; நாடுகிறார்கள்; மதிக்கிறார்கள்! ... ஏனெனில், நம் நாட்டில் மட்டுமின்றி, இந்த உலகில் தோன்றிடும் தெய்வீகக் கலைஞர்கள் (Mystics), அருளாளர்கள் (Divinators), இறைமையாற்றல் பெற்றவர்கள் (Prophets), ... அனைவருமே; பொது மக்களுக்கு 'அற்புதங்களை', 'வியப்புக்களை', 'மாயங்களை' ... அருள் விளையாட்டாகச் செய்து காட்டுபவர்களாகத்தான் பெரும்பாலும் செயல்பட்டுச் சென்று வருகிறார்கள். அதாவது, பெரும்பாலும் அருளாளர்கள் யாருமே, தங்களைப் போன்று, 'கடவுள் தன்மை' அல்லது 'தெய்வீக ஆற்றல்' (Divine Nature or Mystical Power) தங்களுடைய வாரிசுகளுக்கும் (Disciples or Heirs) ஏற்படும்படிச் செய்வதே இல்லை; அதனால்தான், சமய உலகில் (Religious World or Field) எப்போதுமே 'வெறுமை', 'வறுமை', 'ஏக்கம்', 'ஏமாற்றம்', 'ஐயம்', 'நம்பிக்கையின்மை', 'எதிர்ப்பு', 'வெறுப்பு', 'மறுப்பு', 'இருள்', 'சிக்கல்', 'தெரியாமை', 'புரியாமை', 'அறியாமை', 'ஏமாற்று', 'சுரண்டல்', 'மடமை' ... முதலிய தீயவை தொடர்ந்து பேராட்சி செலுத்தி வருகின்றன.

*குருதேவரின் மிக உயரிய செயல்திட்டம் இது.*

இவற்றை யெல்லாம் முறையாகவும், கூடுமானவரை முழுமையாகவும் சிந்தித்து முடிந்த பிறகே; எமது செயல்திட்டங்கள் உருவாக்கப் பட்டன. அதனால்தான், யாம் 'பீடு', 'பீற்றல்', 'ஆணவம்', 'அகம்பாவம்', 'தலைமைப்போக்கு', 'ஆதிக்கப் போக்கு', 'ஆடம்பரம்', 'ஆரவாரம்', 'விளம்பரம்', 'காலம் தாழ்த்துதல்' ... முதலிய எந்தப் பயனற்ற, தேவையற்ற, பொருளற்ற நடைமுறைகளையும் பின்பற்றாமல்; எம்மிடம் நேரடியாக வராமல், எம்மால் உருவாக்கப் பட்ட எவரிடம் வந்தாலும்; வருபவர்க்குத் 'தெய்வீக அநுபவங்கள்' (Mystical Experiences), 'தெய்வீக ஆற்றல்கள்' (Mystical Powers), 'இறைமையுணர்வு' (Divine Feelings), 'இயற்கை யிறந்த கூறுபாடுகள்' (Super Natural Elements), ... முதலியவை உடனடியாகக் கிடைக்கும்படி செய்து வருகிறோம். இதனால், "விஞ்ஞான வளர்ச்சி

மெய்ஞ்ஞானத்தைப் பொய்மைப் படுத்தவில்லை...” [The Scientific advancements have not disproved the Religion] என்ற பேருண்மை எம்மால் செயலளவில் மெய்ப்பிக்கப் பட்டு வருகின்றது. இது மத மறுமலர்ச்சிக்குப் பேருதவியாக, உறுதுணையாக இருந்து வருகின்றது.

நண்ப! நிலத்துக்கேற்ற பயிரைத் தேர்ந்தெடுத்துப் பயிர் செய்தால்தான் உழவனின் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். அதுபோலவே, யாமும் எம்மால் உருவாக்கப் படுபவர்களும் தக்காரைத் தேர்ந்தெடுத்தே ‘மெய்ஞ்ஞானப்பயிர்’, ‘அருட்பயிர்’, ‘கடவுட்கலை ஞானப்பயிர்’, ... முதலியவைகளைப் பயிராக்குகிறோம். இதை, யாரும் குறை கூறலோ, குற்றம் சாட்டுதலோ!, ... முறையற்றவை! அல்லது குறையுடையோரின் முயற்சி... என்றுதான் முடிவு கூறும் காலம்.

மனிதனுக்கு மனிதன் உடல், உணர்வு, அறிவு, ஆற்றல், மறம், அறம், திறம், தரம், உரம், சுவை, ... மாறுபடும் என்ற பேருண்மைதான்.... மேற்கூறிய எமது செயல்திட்டம் இயற்கையோடு இயைந்தது என்பதை விளக்கும். மேலும், சிலர், தங்களுக்குப் பிறகு அல்லது தங்களால் எம்மிடம் அறிமுகமானவர்கள் சத்தி, சித்தி, .. பெற்று விட்டதாகப் பொறுமை, எரிச்சல் ... அடைகின்றனர். இதுவும் தவறே. **“உருவத்தால் பெரிய மரங்களானாலும், பருவகாலமின்றிப் பழம் பழுக்க மாட்டா”** ... என்ற மூதுரைப்படி ஒவ்வொரு தனிமனிதரும் அவரவர் ஊழ்வினை, வினை, செய்வினை, ஆள்வினை, முனைப்பு, உழைப்பு, ... முதலியவற்றின் அடிப்படையில்தான் பத்தி, சத்தி, சித்தி, முத்தி... பெறுகிறார்களே தவிரக் கால அளவாலோ! ஆசையாலோ! ... அல்ல. எனவே, **எவரும், என்றைக்கும் குருவின் அருள் ஒருவருக்கொருவர் மாறுபடுவதாகக் குறை கூறிடக் கூடாது.**



நண்ப! நல்ல கல்வி, உலகியல் ஞானம், முறையான முயற்சி, நிறைந்த ஏட்டறிவு, முதிர்ந்த பட்டறிவு, சிறந்த சுற்றம், திட்பம் மிக்க நட்பு, நேரடியான வழிகாட்டல், தாராளமாக அருட்கொடை வழங்கல், ... முதலியவற்றின் அடிப்படையிலேயே எமது பணிகள் துவக்கப் பட்டன. இதனால்தான், தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு ... என்ற உணர்வுடையாரின் நெஞ்சங்களையும், சிந்தைகளையும் நாற்றங்காலாக்கி அருட்பயிர் விளைவிக்கும் பணி ‘சித்தர் நெறி’ பரப்பும் பணி நல்ல வளமும், செழிப்பும் பெற்றுள்ளது. நாற்றங்காலில் தயாரான நாற்றுக்களைப் பலரும் வாங்கிச் சென்று தங்களது ‘கழனிகளில்’, ‘வயல்களில்’, ‘தோட்டங்களில்’, ... நட்டுப் பயிர் செய்யும் பொற்காலமும் வந்து விட்டது. இப் பொற்காலம் இந்தியத் துணைக் கண்டத்துக்கே நற்காலத்தை நல்கும்.

*மண்ணுலகம் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால் சித்தர்கள் தமிழில் வழங்கிய நெறிகள் பயன்படுத்தப் படல் வேண்டும்*

நண்ப! தமிழினத்தைப் போருக்குத் தயாரிக்கும் பணியல்ல எமது பணி. தமிழினம் மனித இன ஒற்றுமை, நிம்மதி, நிறைவு, மகிழ்வு, அமைதி, ... முதலியவைகளுக்காக மாபெரும் அருட்பணி ஆற்றிடத் தயாரிக்கும் பணியே எமது பணி. ஆனால், இதற்காக பழம்பெரும் தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு, ... என்பவை சிதைவுறவோ, சிறுமையுறவோ, சீர்குலையவோ அனுமதிக்க முடியாது. இந்த மண்ணுலகம் முழுதுமுள்ள மானுடர்கள் ஒருங்கிணைந்து ஒற்றுமையுடன் ஒருவரையொருவர் பற்றுடனும் பாசத்தோடும் நட்புப் பாராட்டி மகிழ்ச்சியோடு அமைதி நிறைந்த வாழ்வு வாழச் செய்யும் அரிய மூலிகைகள் பயிராகும் நாற்றங்கால்தான் தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு என்ற முக்கோண வயலில் பயிராக்கப்

பட்டிருப்பவை. இப்பயிரை வளர்த்துக் காத்து வருபவர்களே பதினெண்சித்தர்கள். இன்றைக்கு இந்த இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பதினெண்சித்தர்கள் வளர்த்த மூலிகைகளைச் சித்தர் நெறி என்று மருந்தாக்கி உலகெங்கும் வழங்கும் மாபெரும் பணியே துவக்கப் பட்டிருக்கிறது. **இதனை நம்மவர்கள் முதலில் உணர வேண்டும். பிறகு இதனை உலகம் நம்ப வேண்டும். இதற்கான முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்குப் பயிற்சியளிக்கவே எமது எழுத்தும், பேச்சும், செயலும், ... பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.**

நண்ப! சித்தர் நெறிதான் இன்றைக்கு 'இந்துமதம்' என்ற பெயரும் வடிவும், வாழ்வும் பெற்றிருக்கிறது. எனவேதான், நாம் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' அமைத்து **நமது முயற்சியை இந்தியத் துணைக் கண்டம் தழுவிய ஒரு பெரு முயற்சியாக வளர்த்திருக்கிறோம்**. இந்த வளர்ச்சியின் முயற்சிதான் எல்லா இனத்தவரையும், மொழியினரையும், மாநிலத்தவரையும்... இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளும் புதிய புரட்சித் திட்டம் உருவாகக் காரணம்.

நண்ப! **யார் நம்மோடு சேர்ந்தாலும், தமிழ்மொழியின் கடவுள் தன்மை, தெய்வீக ஆற்றல், அமுத ஆற்றல், அழகு, இனிமை, உயர்வு, உயிர்த்துடிப்பு, மாரு இளமை... முதலியவற்றை அநுபவத்தால் உணர்ந்தே தீருவர்**. அதற்குரிய வாய்ப்புக்கள், வசதிகள், ... ஏராளமாக நமது செயல்முறைகளில் உள்ளன. எனவே, யார் நம்மோடு வந்தாலும் அவர்கள் விரைவில் '*தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற முக்கோணக் கோட்டைதான் இம்மண்ணுலகில் முதன் முதலில் மனித இனம் பண்பாட்டை, நாகரிகத்தை, கலையை, கல்வியை, வாழ்வை, ... ஒழுங்கு படுத்தி நல்லாட்சி நிறுவக் கட்டப்பட்டது*' என்ற பேருண்மையை உணர்வர், ஒப்புக் கொள்வர், நம்புவர்.

நண்ப! **நாம் மாற்று மதங்களோடு போராடத் தயாராகவில்லை**. நாம், முதலில் நம் மதத்தவர்களை நமது மதத்தின் தொன்மை, மேன்மை, திண்மை, நுண்மை, உண்மை, பயன், ... முதலியவைகளைப் புரியச் செய்யும் மாபெரும் பெருமுயற்சியில்தான் ஈடுபட்டுள்ளோம். எனவே, நாம் எல்லா மதங்களையும் மதிக்கிறோம், விரும்புகிறோம். ஆனால், நாம் எல்லா மதங்களும் ஒற்றுமையோடு ஒருங்கிணைந்து மனித வாழ்வில் அமைதியும், நிறைவும், நிம்மதியும், மகிழ்வும்... விளைந்திடச் செய்யும் பெருமுயற்சியையே விரும்புகிறோம்; அதற்காகவே பாடுபடுகிறோம் ... என்பதை வெளிப்படையாகக் கூறுகிறோம்.



நண்ப! நாம், நமது மதத்தின் அருமைகளையும், பெருமைகளையும், வரலாறுகளையும், சிறந்த தன்மைகளையும்.... எடுத்துக் கூறி நமது மத மறுமலர்ச்சிக்காகப் பாடுபடுகிறோம். ஆனால், இதை யாரும் மதவெறி என்று குறை கூறிக் குற்றஞ்சாட்ட முற்பட்டிட்டால்; அதை நம்மால் பொறுத்துக் கொள்ளவே முடியாது! பொறுமையாக ஏற்றுக் கொள்ளவே முடியாது! முடியாது!! முடியாது!!!

நாம், நமது மதத்தவர்களே நமது மதத்தைப் புரிய முடியாமல், உணர முடியாமல், ... அவசரப் பட்டுப் பழித்தும், இழித்தும் ... கூறி மத அழிவுப் பணியில் ஈடுபட்டிருப்பதைத் தடுக்க முற்பட வில்லை; ஆனால், நாம் அவர்களை அறிவால், அறிவார்ந்த விளக்கங்களால், ... திருத்தும் முயற்சியில்தான் ஈடுபட்டுள்ளோம். எனவே, **நமது இயக்கம் நமது மதத்துக்குள் நடைபெறும் ஒரு பண்பாட்டு நிகழ்ச்சியே** [Our organization is only a cultural activity movement. This is not against any religion. And this is not a political organization. This aims only Renaissance in Religion]. இது எந்த மதத்துக்கும் விரோதமானதல்ல. இது ஓர் அரசியல் இயக்கமல்ல. இது மதத்துறையில்

மறுமலர்ச்சியை விளைவிக்கும் குறிக்கோளை மட்டுமே உடைய ஓர் அமைப்பு. அவ்வளவுதான்!



இன்றைய நமது நாட்டின் நிலை, ஒருசில அவசரக்கார, ஆத்திரக்கார, அதிகார வெறி கொண்ட, பதவி மோகம் பிடித்த, ஆணவம் கொண்ட, ... அரசியல் வாதிகளின் கையில் அகப்பட்டு அவதிப்படும் அவல நிலையேயாகும். அதிலும், உலக வரலாற்றில் எதிர்பாராத சூழலில் இமயம் முதல் குமரி வரை பரந்துபட்ட ஒரு பெரிய நிலப்பரப்பு ‘இந்தியா’ என்றோர் நாடாயிற்று. இந்நிலப் பரப்பு (56) ஐம்பத்தாறு முதல் நூற்றெட்டு (108) நாடுகளாகவும்; ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிற்றரசுகளாகவுமே விளங்கி வந்திட்டது. எனவேதான், இந்த இருபதாம் நூற்றாண்டில் ‘இந்தியா’ என்றோர் நாடு உருவாக்கப் பட்டும் ‘இந்தியர்’ என்றோர் இன உணர்வு உருவாகாமலேயே போய்விட்டது. அதாவது, **நாட்டை உருவாக்க முடிவது போல்; மக்களின் உணர்வைப் புதிதாக உருவாக்க முடியாது.** அதேபோல், ஒரு வட்டார மக்களின் மொழியான இந்தி மொழியை இந்தியாவில் உள்ள எல்லா மக்களும் தங்களுடைய மொழியாக ஏற்றுக் கொள்ள வைக்கும் முயற்சியும் மாபெருந் தோல்வியாகவே முடிந்திருக்கின்றது. தன்மான உணர்வும், தாய்மொழிப் பற்றும் உள்ள எந்தப் பகுதியினரும் தங்களுக்கு அன்னியமான இந்தி மொழியை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். அது மட்டுமல்ல, **இந்தி மொழி வளர்ச்சியடையாத கரடுமுரடான சொல்வளமற்ற ஒரு மொழி** என்பதால்; அது பிற மொழிகளைச் சிதைக்கவும், கொன்று தின்று ஏப்பம் விடவும் செய்யக் கூடிய ஒன்றாக இருப்பதால்; விவரமறிந்த எந்த மொழியினரும் இந்தியைப் படிக்கவே மாட்டார்கள். இந்தி மொழியைப் பேசுவதே ஒரு மொழியாளரின் ஒலிநயத்தைப் பெருமளவில் பாதித்திடும். எனவே, இந்தி மொழியை அரசியல் மொழியாக்கி; அதைப் பிற மொழியினரின் மீது திணிப்பது இந்தியாவைத் துண்டு துண்டாகச் சிதறடிக்கும். இந்தி மொழியினருக்கும் பிற மொழியினருக்கும் ஒரு மாபெரும் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு ஏராளமான உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்படும். ஒரு வேளை, இந்த உள்நாட்டுப் போரில் இந்தியா என்ற ஒரு நாடே இல்லாமல் போனாலும் போகலாம்.

*[ நமது மொழிக் கொள்கை ]*

இந்த வருங்கால வரலாற்றுப் பேருண்மையை எம்மைப் போன்ற எண்ணற்றோர் தொடர்ந்து வலியுறுத்தியும்; இந்திய அரசியல்வாதிகள் உணரவும், ஒப்புக் கொள்ளவும், நம்பவும் மறுத்து வருகிறார்கள். இதனால் இந்தியாவிற்குப் பேரழிவும், பேரிழிவும்தான் ஏற்படும். இதைத் தவிர்க்க, அமைதியான முறையில் இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளையும் அரசாங்க ஆட்சிமொழியாக (Government Administrative Language) ஆக்கிடும் பணி நிறைவேற்றப் படல் வேண்டும். இன்றைய இந்தி வெறியர்களும், அரசியல் வாதிகளும் தங்களின் போக்கில் தொடர்ந்து செயல்பட்டால் இந்தியா துண்டு துண்டாகச் சிதறியே தீரும்.

நம்மைப் பொறுத்தவரை இந்தியா ஒரே நாடாக, ஒரு கூட்டாட்சி அரசாக [United States of India] இருந்தே தீர வேண்டும் என்ற கொள்கைதான். ஆனால், இந்தியா கூட்டாக, ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் குறிப்பாக இந்தி வெறியர்களும் (The Hindi Fanatics), வட இந்திய ஆதிக்க வெறி பிடித்த அரசியல்வாதிகளும் (The North Indian Power-mongering Fanatic and Fascist Politicians) தவறாகப் பயன்படுத்திக் குழப்பங்களை விளைவித்துப் பிற மொழியினருக்கும் மாநிலத்தவருக்கும் அநீதிகளையும் கொடுமைகளையும் செய்து வருகிறார்கள். இதைக் கண்டித்துத் திருத்தும் துணிவும் நேர்மையும் உடைய அரசியல் வாதிகள் இன்னும் ஆட்சி பீடம் ஏறவில்லை. விரைவில் அத்தகைய

கருத்தும் ஆற்றலும் உடையவர்கள் இந்தியத் துணைக் கண்ட அரசியலில் தலைமை தாங்கிடும் நற்காலம் வந்தே தீரும். இல்லாவிட்டால், அமெரிக்காவைப் போல், ‘வடக்கு’, ‘தெற்கு’ என்ற மாபெரும் பிரிவினைக்காக உள்நாட்டுப் போர் நிகழ்ந்தே தீரும்; ... நிகழ்த்தப் பட்டே தீரும். அதைத் தவிர்க்க, தடுக்க.... நம்மாலான முயற்சிகள் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

*தமிழ் மொழியின் வலிமை, வல்லாண்மை*

நண்ப! **மொழிதான் ஒரு வட்டார மக்களின் அல்லது ஓர் இன மக்களின் உயிர்நாடி. அதுதான் அகப்பண்பாட்டையும், புற நாகரிகத்தையும் கருவாகக் கொண்டு உருவாக வளர்த்துக் காத்துத் தருவது.** “மொழி மக்களின் விழி” என்ற பேருண்மையினை உணராத இனத்தினர்; தங்களது தாய்மொழியைப் பிற மொழியினருக்கு அடிமைப் படுத்துபவர்களாக, காட்டிக் கொடுப்பவர்களாக மாறி இறுதியில் அதன் அழிவுக்கும் காரணமாவார்கள். “ஓர் இனத்தின் வரலாறே அதனுடைய தாய்மொழியில்தான் அடங்கியிருக்கிறது”, “ஓர் இனத்தின் வாழ்வும் அழிவும் அதனுடைய தாய்மொழியின் வளர்ச்சியிலும் மலர்ச்சியிலும் செழுச்சியிலும்தான் அடங்கி யிருக்கிறது”; எனவேதான், நாம் பிறமொழியை அடிமைப் படுத்தவோ, நலிவு படுத்தவோ, இழிவு படுத்தவோ முற்பட வில்லை. எல்லா மொழிகளும் சமய மொழிகளாகப் (Religious Language) பயன்படல் வேண்டுமென்ற பொதுமைக் கருத்தே நமது புரட்சிக் கருத்து. இருப்பினும், பதினெண்சித்தர்களின் மொழி ‘தமிழ்மொழி’, ‘விண்வெளியில் உள்ள அண்டங்களில் வாழுகின்றவர்கள் பேசுகின்ற மொழி தமிழ்மொழி’, ‘உயிரை உணர, வெளிப்படுத்த;



கூடுவிட்டுக் கூடு பாய; அத்திறங்களை ஓச்ச; தொலைதூரங்களுக்கு ஆற்றலைச் செலுத்த, மானுட உடலில் மருந்துக்குக் கட்டுப்படாத நோய்களை நலப்படுத்த; இயற்கையைக் கட்டுப்படுத்தி ஆணைவழிச் செயல்படச் செய்ய; முற்பிறப்பு, மறுபிறப்புக்களை அறிய; பிறவாமை நிலையும் (= உயிர்ச்சித்தி), இறவாமை நிலையும் (= உயிருடல் சித்தி) பெற்றிட, உடலைக் காயகல்பம் செய்ய; எல்லாப் பொருள்களிலும் இறையாற்றல் ஊற்றெடுக்கச் செய்ய [மந்திற, எந்திற, தந்தர, தாந்தர, தாந்தரீக, ... முதலிய பல கலைகள்] இனந்தெரியாத அச்ச, இச்சை, ஏக்க, வருத்த,,, உணர்வுகளுக்குத் தீர்வு காண; ... நமது தாய்மொழிதான் உலக அளவில் கணக்கற்ற கோடி ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றது. இருப்பினும், உலகின் வேறுபகுதிகளில் சிறந்த அருளாளர்கள் தங்களின் தாய்மொழியைப் பயன்படுத்தித்தான் அருளாட்சி செய்து சென்றுர்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால், எமது முன்னோர்கள் இந்த எண்ணத்தை ஏற்கனவே கடந்த இரண்டு நூற்றுண்டுகளாக ஆராய்ச்சிக்குரியதாக்கி விட்டார்கள். அதன் பயனாக, **“இந்த உலகிலுள்ள ‘அருள்மொழிகள்’, ‘கடவுள்மொழிகள்’, ‘தெய்வீக மொழிகள்’, ‘சமய மொழிகள்’ ... முதலியவை அனைத்தும் தமிழ்மொழியின் அடிப்படையில் தோன்றியவைதான்....”** என்ற பேருண்மை கண்டுபிடிக்கப் பட்டது. இதுபற்றி என் தந்தை பல நூல்கள் எழுதியுள்ளார்.

நானும், பலமொழிக்குரிய தெய்வீகக் கலைஞர்களுடன் (Mystics), முனிவர்களுடன் (Saints and Sages), அருளாளர்களுடன் (Divinators), மந்திறவாதிகளுடன் (Magicians), சூன்யக் காரர்களுடன் (experts in the art of Sorcery), மைவேலைக்காரர்களுடன் (experts in the Black Art), பேய்க்கலை வல்லார்களுடன் (Witchcraft) ... பழகி இருக்கின்றேன் ஆதலால்; “இந்தச் ‘சமயத்துறை மொழிகளின் அடிப்படை ஒலிகள்’ [the fundamental phonemes of

the religious languages] அனைத்துமே தமிழ்மொழியின் எழுத்துக்களுக்கே உரியனவாகத்தான் இருக்கின்றன" என்ற கருத்தை ஒப்புக் கொள்ளுகின்றேன்.

நண்ப! நான் தமிழன் என்பதாலோ! தாய்மொழிப் பற்று மிக்கவன் என்பதாலோ! பதினெண்சித்தர் பீடாதிபதி என்பதாலோ!... சித்தர்களின் மொழியான தமிழ்மொழியைப் புகழ வேண்டும், போற்ற வேண்டும், உயர்வு படுத்த வேண்டும் ... என்ற நோக்கில் மேற்படிக் கருத்துக்களைக் கூறவில்லை. நான் ஓர் ஆராய்ச்சி மாணவன். எந்தப் பேருண்மையையும் ஆர்வத்தோடும் விருப்பத்தோடும் ஏற்கத் தயாராக இருப்பவன். தமிழ்மொழியை விடப் பேராற்றல் படைத்த மொழியொன்று இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டால்; அது என் தாய்மொழியாக இல்லாவிட்டாலும்; அதைக் கற்றுப் போற்றிப் பயன்படுத்தத் தயாராக இருப்பவன்.

நான், எப்படி என் தாய்மொழியை மதிக்கிறேனோ! விரும்புகிறேனோ! போற்றுகிறேனோ! பேணுகிறேனோ! காதலிக்கிறேனோ! ... அதைப் போலத்தான், ஒவ்வொருவரும் தங்கள் தங்களின் தாய்மொழியை மதிப்பார்கள், விரும்புவார்கள், போற்றுவார்கள், பேணுவார்கள், காதலிப்பார்கள் ... என்ற பேருண்மையினை உணர்ந்தவன், மதிப்பவன், நம்புகிறவன். எனவே, நான் எவர் மீதும் கட்டாயமாகத் தமிழ்மொழியைத் திணிக்க விரும்பவில்லை. ஆனால், சித்தர்களின் சமயத் தத்துவங்களையும், சித்தங்களையும், சித்தாந்தங்களையும், வேதங்களையும், வேதாந்தங்களையும், மறைகளையும், மறையாந்தங்களையும், முறைகளையும், முறையாந்தங்களையும், நெறிகளையும், நெறியாந்தங்களையும், குருவாக்குகளையும் [αஉபநிடதங்கள்[1] = குருவின் அருகிலேயே இருந்து கற்பதற்குரியவை இவை], திருவாக்குகளையும் [சூத்திறங்கள், சூத்தரங்கள் --> βசூக்தங்கள் = இவை சுருக்கமாக விரிந்த பொருளைத் தரவல்லவை], அருளுரைகளையும், குருவாசகங்களையும், குருவாணைகளையும், திருவாசகங்களையும், திருவாணைகளையும், ஆயகலைகளையும், அருட்கலைகளையும், சாத்திறங்களையும், தோத்திறங்களையும், நூல்களையும்.... முழுமையாகத் தெரிய, அறிய, ஆராய, புரிய, தெளிய, உணர, ஒப்புக் கொண்டு செயல்படுத்திட, உரிய பயனைத் துய்த்திட, ... எவர் விரும்பினாலும், அவர் தமிழ்மொழியைக் கற்றுத்தான் தீர வேண்டும்; வேறு வழியே இல்லை.

*கணிணித் துறை பயில ஆங்கிலம் தேவை என்பது போல் அருட்சத்தி சித்திகளுக்கு தமிழ்மொழி தேவை.*

நண்ப! இப்படி நான் கூறுவது மொழிவெறியால் அல்ல. இன்றைக்கு வளர்ந்து வரும் மேனாட்டு விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம்.... முதலியவற்றில் மிகுந்த தேர்ச்சியாளராக (Specialists and Experts) வளர விரும்புகிறவர்கள் அவசியம் ஆங்கில மொழியைக் கற்றுத்தான் தீர வேண்டும். இது அனைவரும் தெரிந்த, ஒப்புக் கொள்கின்ற ஓர் உண்மை. இதைப் போன்ற ஓர் உலக உண்மைதான் (an Universal Truth) தமிழ்மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெறுபவர்களால்தான் சமயத் துறையில் மிகுந்த தேர்ச்சியாளர்களாக (Religious Experts, Specialists --> Divinators, Mystics, Sages, Saints, Siddhargal, Naayanmargal, Aazhvaargal... and so on) வளரமுடியும்; யாரும் இதைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

நண்ப! சித்தர்கள்தான் மனித இனத்தை விலங்கு நிலையிலிருந்து உயர்த்தப் பாடுபட்டார்கள். அதற்காக அவர்கள் கையாண்ட மிகச் சிறந்த சாதனங்கள் 'மொழி' [Language], 'சமயம்' [Religion]. இந்த இரண்டும் கூட்டம் கூட்டமாக விலங்குகள் போல் திரிந்தலைந்த மனித இனத்தைத் 'தனிநபர் வாழ்வு' [Individual Life]. 'குடும்ப வாழ்வு' [Family Life], 'சமுதாய வாழ்வு' [Social Life] எனும் முக்கோணக்

[1] α,β சமசுக்கிருதச் சொற்கள் = Sanskrit Words = வடமொழிச் சொற்கள்

கோட்டையைக் கட்டி முடித்து மனித இன நல்வாழ்வுக்குரிய பணிகளைச் சட்டமாக்கித் திட்டமிட்டுச் செயல்படுவதற்குரிய எல்லா வாய்ப்பு வசதிகளையும் உருவாக்கினர். அதன்பிறகு, 'அரசியல் ஞானம்' உருவாக்கப் பட்டது. அப்படி 'அரசியல் ஞானம்' பிறந்த முதல் இடம் 'குமரிக் கண்டம்' எனப்படும் 'இலெமூரியாக் கண்டமே' ஆகும். {[The Lost Lemuria] இந்த இலெமூரியாக் கண்டத்தை வரலாற்றாசிரியர்கள் 'கொண்டுவாணா'க் கண்டம் [Gondwana] என்றும் குறிப்பர். இன்றைய தென்னாப்பிரிக்காவைச் சுற்றி இன்றுள்ள இந்தியா, ஆசுத்திரேலியா, தென்னமெரிக்கா, அண்டார்டிக்கா, ... முதலியவைகளை ஒருங்கிணைத்து ஒரு வரைபடம் போட்டால் கிடைக்கக் கூடிய பெருநிலப் பரப்புத்தான் பண்டைய குமரிக் கண்டம். இப்பேருண்மை இயற்கையில் கல்லாகிக் கிடக்கும் உயிரினங்கள், பயிரினங்கள் (Fossil remains) முதலியவற்றைப் பற்றி ஆராய்ச்சிகளால் மெய்யாக்கப் பட்டுள்ளது. அதாவது தென் அமெரிக்கா முதல் ஆசுத்திரேலியா, தென்னாப்பிரிக்கா, தென் இந்தியா வரையுள்ள இடங்களில் கிடைக்கும் கல்லாகிக் கிடக்கும் பயிரினங்களும் உயிரினங்களும் ஒரே வகையினவாக இருக்கின்றன.} இக்குமரிக் கண்டத்தில்தான் முதல் அரசு உருவாயிற்று. [¥ The first Government of this universe got birth in the Kumari Continent, 'The Lost Lemuria'. This is the birth place of the aboriginates of this Universe. That is to say the Tamils are the aboriginates of this Universe; The Tamil language is the first language of this mankind; The Tamil Civilisation is the first civilization of this Universe.... And so the Tamilian races and its assets are the Mother Liquor of this Universal Assets. --].




*சித்தர் நெறியே மதங்கள் அனைத்துக்கும் தாய்.*

[¥ இந்தக் குமரிக் கண்டத்தில்தான் இம்மண்ணுலகின் பூர்வீகக் குடிகள் பிறந்தனர். இவர்கள் தமிழர்களே. எனவே, தமிழ் மொழிதான் இம்மண்ணுலகின் முதன்மொழி; தமிழ் நாகரிகம்தான் இம்மண்ணுலகின் முதல் நாகரிகம். அதாவது, தமிழினத்தின் சாதனைகள்தான் இம்மண்ணுலகிலுள்ள அனைத்துச் சாதனைகளுக்கும் தாய் --]

பதினெண்சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புகளும் ஒன்று சேர்ந்து பஃறுளியாற்றங்கரையில் உருவாக்கிய முதல் மானுட அரசுதான் 'பண்டைய அரசு', 'பாண்டிய அரசு' ... என்று காலப் போக்கில் சிறப்பிக்கப் படும் நிலையை அடைந்தது.

இப்படி மண்ணுலகுக்குத் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, ... முதலிய அனைத்து வாழ்வியல் அமைப்புக்களையும் வழங்கியவர்களே பதினெண்சித்தர்கள். இவர்களின் வாரிசுகளே இம்மண்ணுலகில் தொடர்ந்து 'சித்தர் நெறி [The Siddharism is not a Religion; but it is a philosophy. This philosophy is the Mother Liquor for all other Sciences, Arts and Religions] என்ற பெயரால் மாபெரும் தத்துவப் பணியை ஆற்றி வருகிறார்கள். அதாவது, சித்தர் நெறி ஒரு மதமல்ல; இது ஒரு மாபெரும் தத்துவம். இந்தத் தத்துவமே எல்லா அறிவியல்களுக்கும், கலைகளுக்கும், மதங்களுக்கும் தாயாக இருந்து வருகின்றது.

'சித்தர் நெறி' பிறந்த மண்ணான குமரிக் கண்டத்தில் ஒரு பகுதியான இந்தியாவிலேயே வேரூன்றி இருக்கிறது. இது புத்தம், சமணம்,... போன்ற பல பெயர்களைப் பெற்றதுண்டு. இப்போது, நாட்டின் பெயரால் 'இந்து மதம்' (இந்தியாவின் மதமே இந்து மதம் India --> Induism) என்று உலக அரங்கில் அறிமுகமாகி வாழுகின்றது. சித்தர் நெறியின் வழிபாட்டுக்குரிய சின்னம் **'இலிங்கம்'**. இந்த இலிங்கச் சின்னம் ஒரு காலத்தில் இம்மண்ணுலகம் முழுதும் வணங்கப் பட்டது. நண்ப! இங்கிலாந்து முதல் சப்பான் வரை **இலிங்க வழிபாடு** சிறப்பாக இருந்திட்டது. சீனா, சப்பான், இந்துக்கடல், பசிபிக் கடல் தீவுகள், ... முதலிய பகுதிகளில் இன்றைக்கும் இலிங்க வழிபாடு காணப்படுகின்றது. ஆப்பிரிக்க அமெரிக்க மக்களிடையில் இலிங்க வழிபாடு மிகச் சிறப்பாகவும் முதன்மையாகவும் இருந்திருக்கின்றது. கிறித்துவ வேதநூலில் அசீரிய, யூதேய, சிரிய, சின்ன ஆசிய, பாபிலோனிய, ... மக்களிடையில் ஆதிகால வழிபாடு இலிங்க வணக்கம்தான் என்ற பேருண்மை மிகத் தெளிவாகத் தெரிகின்றது. எகிப்தில் இலிங்கம் மிகச் சிறப்பாக 'ஏகம்', 'கோரசு', 'இசுரசு', 'சராபிசு', ... முதலிய பல பெயர்களில் வணங்கி வழிபடப் பட்டது. எகிப்தியப் பிரமிடுகளின் சுவர்களில் இலிங்கங்கள் வெட்டப் பட்டிருக்கின்றன. அயர்லாந்தில் பல கிறித்துவ ஆலயங்களில் 'சீலநாகிக்' (Sheila-na-gig) என்ற பெயரில் சிவலிங்கங்கள் இருக்கின்றன. செர்மனியிலும், பிரான்சிலும் இலிங்க வழிபாடு நிகழ்ந்ததற்குரிய சான்றுகள் இன்றும் காணப் படுகின்றன. 'இலிதுவெனியா மக்கள்' [Lithuanians] கி.பி. 14ஆம் நூற்றாண்டில் கிறித்துவ மதத்தை ஏற்றுக் கொள்ளும் வரை இலிங்க வழிபாடுதான் செய்தனர். திபெத்து, பூட்டான்... முதலிய இடங்களில் இலிங்க வழிபாடு இன்றுமிருக்கிறது. அமெரிக்காவில் கெயிட்டித் (Hayti) தீவு, பெரு, மெக்சிக்கோ.... பகுதிகளில் இலிங்க வழிபாடு நிறைந்து இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.



இப்படிச் சித்தர்கள் உருவாக்கிய இலிங்க வழிபாடு ஒரு காலத்தில் உலகம் முழுதும் பரவியிருந்தது என்ற உண்மை வரலாற்றுப் பூர்வமாகத் தெளிவாக அறியப் படுகிறது. இருந்தும், இன்றைக்குப் 'பொதுவுடமைவாதிகளும்(Communists), நாத்திகவாதிகளும் (Atheists), பகுத்தறிவு வாதிகளும் (Rationalists)... வறட்டுத் தனமாகவும், முரட்டுத் தனமாகவும், "இந்துமதம் இந்தியா முழுவதும் பரவியிருந்ததில்லை", "இந்துமதம் இந்தியாவின் அரசாங்க மதமாக இருந்ததில்லை", "இந்துமதம் இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளில் பரவவில்லை", "வெளிநாட்டு மதங்கள் இந்தியாவுக்குள் பரவுவதைத் தடுக்கும் ஆற்றல் இந்துமதத்துக்கு இல்லை", "மற்ற மதங்களைப் போல் இந்து மதத்துக்குத் தெளிவான தலைமையோ, நடைமுறையோ, நிர்வாக ஒழுங்கமைப்போ இல்லை", "இந்து மதத்தை இந்தியா அரசாங்க மதமாக ஏற்க இயலாது" ... என்பன போன்ற சில கருத்துக்களை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

*இன்று தவறான கருத்துக்களை குறுகிய நோக்கங்களுக்காக படித்தவர்களே பரப்பி வருகின்றார்கள்.*

நண்ப! இது மேற்கூறியவர்களின் கண்மூடித்தனமான போக்கையும், கருத்துத் தெளிவற்ற வறட்டு வாதத் தன்மையையும், வரலாற்று அறிவின்மையையும், அறியாமையையும், ஆத்திரமிக்க தவறான போக்கையுமே காட்டுகிறது. அதாவது, இந்துமதம் வலிமையும், பொலிவுமிக்க ஆட்சியாண்மை பெற்று விளங்கினால்; அது மற்ற மதங்களோடு போரிட்டுக் கொண்டே இருக்கும். அதனால், இந்துமதத்தை வலுவிழக்கச் செய்து நலிவுபடுத்தி விட்டால் இந்துமதத்தின் தற்காப்பு உரிமைப்போர் தடுக்கப் பட்டுவிடும்... என்று மேற்குறிப்பிட்ட பொதுவுடமைவாதிகள், நாத்திகவாதிகள், பகுத்தறிவுவாதிகள் கருதுகின்றனர். இது மாபெரும் தவறு. இவர்களின்படி, இந்துமதம் தனது உரிமைப் போர், தற்காப்புப் போரை

நடத்துவதுதான் தடுக்கப் படுமே தவிர; இந்த நாட்டில் தங்களுடைய மதத்தைப் பரப்புவதற்குப் பணம், பதவி, உதவி, அரசு, ... முதலிய எல்லாச் சாதனங்களையும் பயன்படுத்திக் கொண்டு; தேவைப்படும் போது போர்க்கோலம் பூண்டு போர்க்களம் புகுந்திடும் கிறித்துவம், முகம்மதியம்... முதலிய மதங்களின் போரை, போராட்டத்தை, அமைதிச் சீர்குலைப்புப் பணியை, ஆக்கப் பணித் தடுப்புக்களை... என்ன செய்ய முடியும் இவர்களால். **<u>இவர்கள், ‘இந்துமதத்தைத் தாக்குவது நீராடிய யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதைப் போன்றதே!’</u>** இதனையே, இன்னும் சற்றுக் கேலியாக விளக்கம் செய்ய வேண்டுமேயானால்; இவர்கள், **‘இந்துமதத்தைத் தாக்குவது நுனிக் கிளையில் உட்கார்ந்து கொண்டு, அடிமரத்தை வெட்டும் அடிமுட்டாள்தனமான செயல் போன்றதே!’** என்றுதான் சொல்ல வேண்டும்.

*அரசியல் சுதந்திரம் பெற்ற பின்னும் இந்தியா இன்றும் மேற்கத்திய நாடுகளுக்கு அடிமை நாடே!*

நண்ப! **இந்துமதம்தான் இந்தியப் பண்பாட்டின் கூறுபாடுகளைப் பாதுகாத்து வருகின்ற ஒன்று.** {It is the Induism (Hindu Religion, Hinduism = The Siddharism) which alone is safe-guarding the cultural heritages of India or Indian Civilisation}. ‘இந்தியா’ என்றோர் நாடு உருவாக்கப்பட்ட போது, ஏறத்தாழ ஓரிரு சிற்றரசுகளைத் தவிர, எல்லா மாநிலங்களும், எல்லா இன மக்களும்... அதை அப்படியே ஏற்றுக் கொண்டன. அதற்குக் காரணம் இமயம் முதல் குமரி வரை ‘இந்துமதத்தால்’ ஒற்றுமைப் படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப் பட்டிருந்ததுதான். இப்பேருண்மையினை அரசியல்வாதிகள் உணரவில்லை. நாத்திகவாதிகள் நம்பவில்லை, பகுத்தறிவுவாதிகள் புரிந்து கொள்ளவில்லை. எனவே, ‘இந்துமதமே உன் விலை என்ன?’ என்று மாற்று மதத்தவர்களும், வேற்று மதத்தவர்களும், மத மறுப்பாளர்களும், மத வெறுப்பாளர்களும், மார்க்சீயத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கும் இந்தியக் கம்யூனிசிட்டுகளும்... துணிந்து சொல்லளவிலும் செயலளவிலும் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். இவர்கள், தாங்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் செய்கிறார்கள். அதனால் இவர்களுக்கு மன்னிப்புண்டு. ஆனால், இவர்களால் விளையும் இழப்புக்களுக்கும் அழிவுகளுக்கும் ஈடு செய்வது என்பது எளிதல்ல! எளிதல்ல!! எளிதல்ல!!!

இந்துக்களே இந்து மதத்தை இழிக்க, பழிக்க, அழிக்க, ஒழிக்க ... முற்படுகின்றார்கள் என்பதால்; அன்னிய மதத்தவர்கள் மறைமுகமாகவும், நேரடியாகவும் இம்முயற்சிக்கு ஆதரவு நல்கியும், ஆர்வமூட்டியும் வருகிறார்கள். இதனால், இந்தியா அரசியல் முறையிலும், பொருளாதார முறையிலும், சமுதாய முறையிலும் ... அன்னியர்களுக்கு அடிமையாகிறது. அதாவது, அன்னிய ஏகாதிபத்தியம் வலிமையுடன் மறைமுக ஆதிக்கக் கை கொண்டு இந்தியப் பண்பாடு, நாகரிகம், கலை, இலக்கியம், தொழில், ... முதலியவற்றின் குரல்வளையை நெறிக்க ஆரம்பித்து விட்டது.



இந்திய விடுதலையின் போது பதவி மோகம், அதிகார வெறி, தானென்ற அகம்பாவ ஆணவம், மேனாட்டு மோகம், எப்படியாவது இந்திய விடுதலையைப் பெற வேண்டுமென்ற முரட்டுத் தனமான வறட்டுப் பிடிவாதப் போக்கு, மத உணர்வு இல்லாமை, அன்னிய ஆட்சியால் விளைந்திட்ட அடிமையுணர்வின் மேம்பாடு, இந்தியப் பண்பாட்டின் அருமை பெருமைகளை அறியாத அறியாமை ... முதலிய பண்புகளைப் பெற்றிட்டவர்களே அரசியல் முன்னணியில் இருந்ததால், ‘இந்து மதம்தான் இந்தியாவின் அரசியல் மதம்’; ‘இந்தியா இந்துக்களுக்கே உரியது’; ‘இந்து மத வழியே இந்திய ஆட்சி

அமையும்'; 'இந்துமதமே இந்தியர்களை ஒன்றுபடுத்தக் கூடியது'; 'இந்துமதமே இந்தியா என்ற நாட்டுணர்வை உருவாக்கக் கூடியது'; 'இந்துமதச் சாத்திறங்களும் சடங்குகளும் இலக்கியங்களும் போற்றிப் பேணிப் பாதுகாக்கப் படலே இந்தியாவைக் காப்பதாகும்'; 'இந்துமத உணர்வே நாட்டுப் பற்றையும், ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்த்திடக் கூடியது'; 'இந்தியக் கல்வித் துறையும் கலைத் துறையும் இந்துமதத்தைச் செழிக்கச் செய்வதையே நோக்கமாகக் கொண்டு செயல்படல் வேண்டும்'... இது போன்ற கருத்துக்களும், ஆணைகளும் பிறப்பிக்கப் படவில்லை. இனிமேலாவது, இந்திய அரசியல்வாதிகள் தங்களுடைய தவறுகளை உணர்ந்து திருந்திடல் வேண்டும்.

"இந்தி மொழியை எல்லோரும் கற்றுக் கொண்டால்தான் இந்தியாவில் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் உண்டாகும்", "இந்திய அரசாங்கத்துக்கென்று ஓர் 'அரசியல்மொழி', 'ஆட்சிமொழி', 'அலுவலக மொழி', ... இருந்தே தீர வேண்டும். அது இந்தியாகத்தான் இருக்க வேண்டும்", "இந்தி மொழியை ஏற்க மறுப்பதும், வெறுப்பதும், எதிர்ப்பதும் இந்திய அரசியல் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் பாதிக்கும்", 'இந்தி மொழியைப் பரப்புவதும், வளர்ப்பதும்தான் இந்திய ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் வளப்படுத்தும்", "இந்தி மொழி வளர்ச்சிக்கு இந்திய அரசே பெரும் பொருட்செலவு செய்யும்", ... என்று இப்படி இந்திய அரசியல்வாதிகள் இந்திய ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் இந்தி மொழியை ஒரு மருந்தாகக் கண்டுபிடித்துள்ளார்கள். இது அடிமுட்டாள்தனம், பித்துக்குளித்தனம், மடத்தனம், அரசியல் கோமாளித்தனம்... என்றுதான் கூறவேண்டும்.

இன்னும் சொல்லப் போனால், இந்திமொழியை அரசாங்க மொழியாக (Government Language), ஆட்சிமொழியாக (Administrative Language), ... ஆக்கியதால்தான் எல்லா மொழியினருக்கும் இந்தி மொழியிடத்து வெறுப்பும், மறுப்பும், எதிர்ப்பும் கொழுந்து விட்டெரியும் காட்டுத் தீயாக, குமுறி வெடிக்கும் எரிமலையின் நெருப்பாக ஆகியுள்ளன. இந்த இந்திமொழி வெறியினரால்தான் இந்தியாவின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும் சிதைந்தும் சீரழிந்தும் வருகின்றன. என்றாவது ஒருநாள், இந்தியநாடு துண்டு துண்டாகச் சிதறிப் பிரியும் நிலை ஏற்படுமேயானால்; அதற்கு இந்திமொழிதான் காரணமாக இருக்கும்.

இந்திமொழி, இந்தியாவின் ஆட்சிமொழியாக எப்போதுமே இருந்ததில்லை; இனிமேல் இருக்கவும் முடியாது. இப்பேருண்மையைத் தெள்ளத் தெளியப் புரிந்தும் உணர்ந்தும் கூட இந்திய அரசியல்வாதிகளும், கம்யூனிசிட்டுகளும், நாத்திகர்களும், பகுத்தறிவு வாதிகளும் இந்திமொழியின் அரசியல் ஆதிக்கத்தை மறுக்கவும், எதிர்க்கவும் பயப்படுகிறார்கள், நடுநடுங்குகிறார்கள்.

**இந்தியாவை எப்படியாவது என்றாவது ஒருநாள் ஒற்றுமைப் படுத்திடும் ஆற்றலுடையது இந்துமதம் ஒன்றுதான்.** இப்பேருண்மையினை இனியாவது எல்லாரும் உணரும்படி செயல்படுவதுதான் நமது தலையாய கடமை. நாமனைவரும் இந்துமதத்தின் அருமை பெருமைகளை, சீரிய பயன்களை, இன்றியமையாத் தன்மைகளை.... அனைவரும் உணரும்படி பொறுமையோடும், பொறுப்போடும் விளக்கி யுரைக்கும் பணியில் ஈடுபட்டிடுவோமாக. நாம், மிகப் பெரிய, சீரிய, அரிய, பயன்மிக்க.... பணியில் உண்மையுடன் ஈடுபட்டுள்ளோம் என்ற பெருமித உணர்வில் களைப்பும் சலிப்பும் அலுப்புமில்லாமல் செயல்பட்டிடுவோமாக.

நண்ப! இந்துமதம் இந்தியாவின் அரசாங்க மதமாக இருந்ததா? இந்துமதம் இந்தியா முழுதும் பரவியிருந்ததா?.... என்றெல்லாம் கேள்வி கேட்கும் கருத்துக் குருடர்கள் தங்களின் அறிவுக் கண்ணைத் திறக்கா விட்டாலும்; சாதாரண புறக்கண்ணை அகலத் திறந்து பார்க்கட்டும்; அப்போதாவது, இமயம் முதல் குமரி வரை விண்ணுயர்ந்த கோபுரங்களும், கண்கவர் கலையழகு ஊற்றெடுக்கும் சிற்பங்கள் மிகுந்த மண்டபங்களும், அருள் ததும்பும் கட்டிடச் சிறப்பு மிக்க கருவறைகளும் உடைய கோயில்கள் கிராமங்களிலும், சிற்றூர்களிலும், நகரங்களிலும், காடுகளிலும், குன்றுகளிலும், மலைமுகடுகளிலும், ஆற்றிடைக் குறைகளிலும், தீவுகளிலும், கடற்கரைகளிலும்... எண்ணற்றுக் கொலு வீற்றிருப்பது இவர்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் தெரியட்டும், புரியட்டும். அதாவது, இந்துமதம் நாடாண்ட அரசர்களின் மதமாக இருந்த காரணத்தால்தான்; கருங்கல்லும் மண்ணும் கிடைக்காத இடம் கூட விட்டுவிடப் படாமல் இந்தியா முழுதும் மேலே குறிப்பிட்டது போல் இந்துமதக் கோயில்கள் மிகப் பெரியவைகளாகக் கட்டப் பட்டிருக்கின்றன. இப்படி வெட்ட வெளிச்சமாகத் தெரியும் பேருண்மையினைக் கூட எண்ணிப் பார்க்கத் தெரியாதவர்களால்தான் இந்துமதத்துக்குத் தொடர்ந்து ஆபத்துக்கள் விளைவிக்கப் பட்டு வருகின்றன. ஆனால், அவை சிறுபிள்ளைகளின் விளையாட்டுக்களாகி வருகின்றன.

*இந்து மதம் எனும் சித்தர் நெறி இந்தியாவின் பூர்வீக மதம்தான் என்பதற்கு சான்று*



நண்ப! ‘இந்துமதம்’ என்று இன்று அழைக்கப் படும் ‘சித்தர் நெறி’ ஒரு காலத்தில் உலகம் முழுதும் பரவியிருந்தது என்கின்ற போது; இந்துமதம் இந்தியா முழுதும் பரவியிருந்தது என்பதை அதிகமாக விளக்கத் தேவையில்லை. அதாவது, ‘கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை’ என்பதுபோல ‘இந்துமதம் இந்தியா முழுதும் பரவியிருந்தது’, ‘இந்துமதமே இந்தியாவின் அரசியல் மதமாக இருந்தது’, ‘இந்துமதமே இந்தியா முழுதும் ஒரே நாடு என்ற உணர்வை ஊட்டி வருகின்றது’ ... என்ற உண்மைகளுக்குச் சான்றுகளைத் தேடியலையத் தேவையில்லை. எனவே, நாம் ‘இந்துமதத்து மறுமலர்ச்சியும் ஆட்சிச் செல்வாக்கும் ஏற்படா விட்டால், இந்திய நாட்டுக்கு வருங்காலமே கிடையாது; இந்திய மக்களுக்கு நல்வாழ்வே கிடைக்காது’ என்ற பேருண்மையினை எல்லா வகையாலும் எல்லா மக்களும் புரிந்து, உணர்ந்து, ஒப்புக் கொண்டு செயல்படும்படிச் செய்ய வேண்டும். இது மிகமிகக் கடிய, நெடிய, மாபெரும் பணியேயாகும். இப்பணிக்கு நம்மை ஆளாக்கிக் கொள்வதில் நமக்கெல்லாம் பெருமிதமும் பூரிப்பும் ஏற்பட வேண்டும்.

“இந்துமதம் சங்கராச்சாரியாரின் சாதனையா?” என்று வினாவெழுப்பி விடைகூறி விளக்கிட வேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டு விட்டது. ஏனெனில், தமிழினத்தைத் தட்டியெழுப்பி அதன் நன்மைக்காகத் தன் வாழ்நாள் முழுதும் தளராமலும் தயங்காமலும் தொடர்ந்து தொண்டாற்றிய தமிழர் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை விமர்சிக்க வேண்டிய அவசியம் நமக்குண்டு.

*பெரியார் ஈ.வெ.ரா.வின் சாதனை*

நண்ப! பைந்தமிழ் நாட்டில் தோன்றிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. இவர் செந்தமிழ் நாட்டின் சிறுமைகளை யெல்லாம் அகற்றிடப் புறப்பட்டிட்ட சீர்திருத்தச் சிங்கம். இவர், சனாதன சமயக் கொடுமைகளையும்,

மடமைகளையும், மூடத்தனங்களையும் எதிர்த்துப் போராடிய மாவீரர். இவர், சமுதாயம், சமயம், கலை, இலக்கியம், தொழில், அரசியல், மொழி, ... முதலிய எல்லாத் துறைகளிலுமே தனது கருத்தைத் துணிவாக வெளியிட்டும்; செயலாக்கும் முயற்சியில் ஈடுபட்டும் வாழ்ந்த அஞ்சாநெஞ்சம் பெற்ற இரும்பு மனிதர். இவர் உருவாக்கிய தொண்டர்கள் இல்லாத துறையே இல்லையென்ற செயலாக்கச் சிந்தனைச் சிற்பி. இப்படிப்பட்ட இவர் வரலாற்றையும், சமயத்தையும், இலக்கியத்தையும் முறையாகக் கற்ற வல்லுநர்களைத் துணையாக ஏற்றுச் செயல்படாமல் போனது ஒரு மாபெரும் சாபக்கேடு; ஈடு செய்ய முடியாத இழப்பு. இவர், தன்னிச்சையாகவும், பிடிவாதமாகவும் செயல்பட்டிடாமல் இருந்திருந்தால்; தமிழினத்தின் எல்லா நலிவுகளும் இழிவுகளும் முழுமையாக அகற்றப் பட்டிருக்கும். ஆனால், அது நிகழாமல் போனதாலேயே இன்றைக்கும் தொடர்ந்து தமிழினத்தின் சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல்... துறைகளில் எல்லாம் சீர்திருத்தப் பணி தொடர்ந்து நடைபெற வேண்டியிருக்கிறது.



இவர் ஆரியர்களால் தமிழர்கள் அடிமைகளாக்கப் படுவதையும், சுரண்டப் படுவதையும் கடுமையாகக் கண்டித்தார். அதற்காகவே, இவர் ஆரியர்களின் வேதங்களையும், இதிகாசப் புராணங்களையும், சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளையும், மத நம்பிக்கைகளையும் கடுமையாகக் கண்டித்தார். மிகமிகக் கொடூரமாகத் தாக்கினார். அதன் விளைவாகத்தான் தமிழர்கள் தன்மான உணர்வு, தன்னம்பிக்கை யுணர்வு, இன உணர்வு, மொழியுணர்வு, நாட்டுணர்வு, சமுதாயப்பற்று, சமயப்பற்று... முதலியவைகளைப் பெற்றிட்டார்கள்.

இந்த நாட்டில் பல நூற்றாண்டுகளாகப் பலகோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும், சமய மரியாதைகளையும் பெற்று வாழும் தமிழினச் சமயத் தலைவர்கள், 'சைவ சித்தாந்த மடங்கள்', 'சைவ சித்தாந்த திருச்சபைகள்', 'சைவ சித்தாந்த ஆதீனங்கள்', 'சைவ சித்தாந்த பீடாதிபதிகள்', ... என்று கூறிக் கொண்டு சுக போக வாழ்வு வாழ்ந்து வந்திட்டார்களே தவிரத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. போல் ஆரிய மாயைகளை, ஆரிய மொழி ஆதிக்கத்தை, ஆரிய சமயச் சர்வாதிகாரத்தை, ஆரிய ஏமாற்றுக்களை, ஆரியச் சுரண்டல்களைத் தாக்கித் தகர்த்துத் தமிழின விழிச்சிக்கும், எழுச்சிக்கும், செழிச்சிக்கும் பாடுபடவே இல்லை. எனவேதான், நாம், **'தந்தை பெரியார் நாத்திகவாதியல்ல; அவரே உண்மையான சிறந்த ஆத்திகவாதி', 'தந்தை பெரியாரால்தான் சமய உணர்வு தழைத்தது', 'பாழடைந்த கோயில்கள் புதுப்பிக்கப் பட்டன', 'சைவ வைணவச் சண்டை அடங்கியது', 'கோயில்களுக்குச் செல்பவர்கள் அதிகமானார்கள்', 'சமய இலக்கிய அறிவு வளர்ந்தது', 'பாசி பிடித்த திருக்குளங்கள் சுத்தம் செய்யப் பட்டுப் பளிங்கு நீரைப் பெற்றன', 'சமயச் சடங்குகளும் திருவிழாக்களும் மிகுந்த ஆர்வத்தோடும், முறையோடும், பெரிய அளவில் கொண்டாடப் படலாயின', 'மதத் தலைவர்களுக்கும் பத்தர்களுக்கும் சமயப் புலவர்களுக்கும் மதிப்பு ஏற்பட்டிட்டது'** .....

இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் தந்தை பெரியாரை அறுபத்தி நாலாவது நாயன்மாராக அறிவிக்க நேரிட்டது. இந்த இருபதாம் நூற்றாண்டில் எந்தச் சமயாச்சாரியாரும், பீடாதிபதியும், மடாதிபதியும், ஆதீனமும், பத்தரும், ... படிக்காத அளவு, படிக்க முடியாத அளவு சமயச் சாத்திறங்களையும், புராண இதிகாசங்களையும் படித்துக் கொண்டே இருந்தவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. ஒருவர்தான். இவர்தான், அன்றாடம் தனது எழுத்திலும், உரையாடலிலும், சொற்பொழிவிலும், ... கடவுள்களின் பெயர்களைச் சொல்லிக் கொண்டே இருந்தவர். "நாமாவளி சொன்னாலே போதும், எல்லா விதமான பூசைகளையும் தவங்களையும் யாகங்களையும் செய்த புண்ணியம் கிடைக்கும்" - என்ற சமயப் பேருண்மையின்படி

பெரியார் ஈ.வெ.ரா.தான் சிறந்த புண்ணியவான். இவருக்குச் சொர்க்கமே கிடைத்திருக்கும். இவரே கடவுளின் அளப்பரிய அன்புக்கு உரியவராகிடுகின்றார்.

**இவற்றின்படிப் பார்த்தால் கடவுளைச் சொல்லால் அடித்துப் பூசைசெய்த 'சொல்லடி நாயனார்'** என்ற சிறப்புக்குரியவராக இவரை அறிவிப்பது சரியே. ஏற்கனவே, கடவுளைச் சொல்லால் அடித்துப் பூசை செய்த 'கல்லடி நாயனார்' ஒருவர் 'சாக்கிய நாயனார்' அறுபத்து மூவர் வரிசையில் உள்ளார். எனவே, இவர் அறுபத்து நான்காவது நாயனாராக அறிவிக்கப் படுவது சமய மறுமலர்ச்சிக்கும், சமுதாயச் சீர்திருத்தத்துக்கும், தமிழின நல்வாழ்வுக்கும், இந்தியச் சிந்தனைக்கும் பெருந்துணையாக இருந்திடும். அதற்காக நாம் **'பெரியார் ஈ.வெ.ரா. நாத்திகரல்லர்; அவர் ஓர் ஆத்திகரே!'** என்ற கருத்தை நிலைநாட்ட வேண்டும்.

இவர் முறையான முழுமையான வரலாற்றுச் சிந்தனைகளைப் பெற்றிடாத காரணத்தால், ஆரியர்கள் மீதிருந்த வெறுப்பைச் சங்கராச்சாரியார் மீதும், வேதங்கள் மீதும் திருப்பினார். அது, இந்துமத மறுப்பாக, வெறுப்பாக, எதிர்ப்பாக உருவெடுத்தது. ஆனால், இந்துமதம் சங்கராச்சாரியாரின் சாதனையல்ல; சங்கரருக்குப் பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்துமதம் தோன்றிவிட்டது; இந்துமதத்தில் நலிவும், தளர்ச்சியும் ஏற்படும் போதெல்லாம் அருளாளர்கள் தோன்றி இந்து மதத்தை வலிமைப் படுத்தி, வளர்ச்சி பெறச் செய்திருக்கிறார்கள். அப்படி இந்து மதத்தைக் காலங்கள் தோறும் காத்திட்ட அருளாளர்களின் பட்டியலில் இடம் பெறுகின்றவரே சங்கராச்சாரியார். இவர், ஏற்கனவே இருந்த வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் பொருள் விரித்துரைத்துத் தனது அறிவாலும் அருளாலும் இந்தியா முழுதும் தனித்தனியாக வளர்ந்திருந்த வழிபாடுகளை யெல்லாம் ஒருங்கிணைத்து இந்துமதம் என்ற நிறுவன ஒழுங்கமைப்பை உண்டாக்கினார். இப்படி, அவர் இந்துமதத்தை இந்தியா அளவில் ஒற்றுமைப்படுத்தி நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்பை ஏற்படுத்தியது உண்மையிலேயே மிகப்பெரிய அரிய சாதனையேயாகும். இச்சாதனையே, இந்துமதத்தை வேறுபாடுகளுக்கிடையில் ஒற்றுமையுடைய ஒன்றாக [Unity amidst diversities] ஆக்கிற்று. அதாவது, இந்துமத நடைமுறைகளிலும், நம்பிக்கைகளிலும் எண்ணற்ற சிறுசிறு வேறுபாடுகள் இருந்த போதிலும்; இந்துமதம் வண்ண வண்ண மலர்கள் பூத்த சோலையாக, பல வடிவுடைய வகைமிக்க சுவையுறு காய்கனிகள் காய்த்துக் குலுங்கும் சோலையாக வடிவமைப்புடைய வாழ்வு பெறச் செய்த ஒரு மாபெரும் முயற்சியை அழகுற நிறைவேற்றியவர் சங்கராச்சாரியாரே. எனவே, இந்துமதம் சங்கரருடைய சாதனையல்ல என்ற போதிலும்; இந்தியா முழுதும் இந்துமதம் என்ற வடிவமைப்பும் வாழ்வும் வளர்ச்சியும், வலிவும் பொலிவும் ஏற்படச் செய்தது சங்கரரின் சாதனையேயாகும். இதற்கு இந்துக்கள் அனைவரும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளார்கள். அதே நேரத்து, இவரால் சமசுக்கிருத மொழியாதிக்கமும், பார்ப்பனச் சமுதாய ஆதிக்கமும், சைவ சித்தாந்த நெறி நலிவுறலும், தமிழ்மொழியின் சமயச் செல்வாக்கு அழிவுறலும், சித்தர் நெறியின் ஆயகலைகள், அருட்கலைகள், சாத்திறங்கள், சாத்தரங்கள், தோத்திறங்கள், தோத்தரங்கள், சூத்திறங்கள், சூத்தரங்கள், குருவாக்குகள், குருவாசகங்கள், குருபாரம்பரியப் படிகள், திருவாக்குகள், திருவாசகங்கள், தேவாரங்கள், பாசுரங்கள், அருட்பாக்கள், மந்திறங்கள், மந்தரங்கள், எந்திறங்கள்,



*இந்துமதத்தை வலிமைப்படுத்திய அருளாளர்கள், சமயக்குரவர்கள், நாயன்மார்கள் வரிசையில் வந்த தமிழின அருளாளரே காலடி ஆதிசங்கரர்*

எந்தரங்கள், அருள்வேட்டல் மாலைகள், கும்மிகள், கண்ணிகள், ... முதலியவை செல்வாக்கிழந்து பயன்படாமல் போனமையும்... நிகழ்ந்திட்டன.

*காலடி ஆதிசங்கரன் சமசுக்கிருத மொழியில் எழுதியதால் பிற மண்ணினரின் ஆதிக்கம் மதத் துறையில் அதிகமாகி தமிழர்கள் தன்னம்பிக்கை இழந்தார்கள்*

இந்த இழப்புக்களை யெல்லாம் ஈடுசெய்யத்தான் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் [கி.பி. 785-1040] அவர்கள் மாபெரும் முயற்சிகளைச் செய்தார். அதன் பயனாகப் பிற்காலச் சோழப் பேரரசு [கி.பி.785-1279 -- The Later Chola Empire] உருவாயிற்று. இது சித்தர்களின் சித்தர்நெறி எனும் ‘சைவ சமயம்’, ‘சைவ சித்தாந்தம்’, ‘சிவமதம்’ [இவர் காலத்தில் **வைணவம்** எனும் தனி மதப்பிரிவு ஏற்படவே இல்லை. கி.பி.1137க்குப் பிறகுதான்; ‘உடையவர் எனப்படும் அருள்மிகு எம்பிரான், எம்பெருமான் திரு இராமானுஞ்சாச்சாரியாருக்குப் பிறகே ‘வைணவம்’ ஒரு தனி மதப் பிரிவாக வளர்ந்தது. இது கருவூர்த் தேவருக்குப் பிறகே [கி.பி.1182] மிகச் சிறப்பாக வடிவமைப்புப் பெற்று வளர்ந்தது] -- எனும் இந்துமதம் தமிழ்மொழியின் அடிப்படையில் மறுமலர்ச்சி பெற்றிடச் செய்தது. (The Indu Religious Renaissance took place under the basis of the Tamil Language. Tamil Language once again attained religious importance. On account of the Later Chola Empire’s administration the Tamil Language regained its religious life. And so, quite a number of Divinators, Mystics, Siddhiars, Prophets ... came out]. அதனால், தமிழ்மொழியின் ஆற்றலின் மூலம் எண்ணற்ற அருளாளர்கள், சித்தியாளர்கள், அடிகளார்கள், அருட்குரிசில்கள், அருட்தோன்றல்கள், அருள்வள்ளல்கள்... தோன்றிட்டார்கள்.

சமயத்துக்குப் ‘பன்னிரு திருமுறைகளும்’, ‘நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும்’, ‘சைவசமயச் சாத்திரங்களும்’, ‘அருட்பாக்களும்’, ‘ஞானக் கும்மிகளும்’, ‘ஞானப் பாடல்களும்’, ‘கைவல்யங்களும்’, ‘ஞானவெட்டியான்களும்’, ‘ஞானக் குடில்களும்’ ... தோன்றிச் சமய மறுமலர்ச்சி உருவாயிற்று. ஆனால், சித்தர் கருவூரர் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழினம் என்ற முக்கோணக் கோட்டைக்குள்ளேயே இருந்து செயல்பட்டிட்டதால், இந்தியத் துணைக் கண்டச் சமய வரலாற்றில் இடம்பெற இயலாமல் போய்விட்டது. மேலும், தமிழர்கள் தங்கள் இனத்தவரில் எவ்வளவு சிறந்தவர் தோன்றினாலும் அவர்களைப் போற்றிப் பேணிப் புகழ்ந்து பாதுகாத்திடும் பண்பற்றவர்கள். இதனாலேயே மிகப் பெரிய சோழப் பேரரசை உண்டாக்கியவரும், தஞ்சைப் பெரிய கோயிலையும் எண்ணற்ற சிறுசிறு கோயில்களையும் கட்டியவரும், (1877) ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தேழு பழம்பெரும் நூல்களைத் தொகுத்தவரும், கணக்கற்ற சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள்... முதலியோரை உருவாக்கியவரும், **மிகப்பெரிய திருவருட்செல்வரும் அருளாளருமான சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் வெளியுலகுக்குத் தெரியாமல் போய்விட்டார்.** இன்னும் சொல்லப் போனால் **‘பிற்காலச் சோழப் பேரரசு ஒரு சமயப் பேரரசு’** [The Later Chola Empire is a Religious Empire, a Divine Empire] என்ற பேருண்மையே வெளியே தெரியாமல் போய்விட்டது. ஆனால், தெலுங்கு மாநிலத்தில் உருவான ‘விசய நகரப் பேரரசு ஒரு சமயப் பேரரசு’ என்ற உண்மை உலகறிய விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம் தமிழர்களின் ஒற்றுமையின்மை, தாழ்வு மனப்பான்மை, அடிமையுணர்வு, அறியாமை, இனப்பற்றின்மை, மொழிப் பற்றின்மை,



நாட்டுப் பற்றின்மை... முதலியவைதான். இவற்றை உணர்ந்துதான், **நாம் நம்மவர்களுக்கு முதலில் 'மொழிப்பற்று', 'இனப்பற்று', 'நாட்டுப்பற்று', 'சமயப்பற்று', 'நாகரிகப் பற்று', 'ஒற்றுமையுணர்வு', 'அடிமை உணர்விலிருந்து விடுபட்ட ஆதிக்கப் பெருமித உணர்வு', 'தன்மான உணர்வு', 'தன்னம்பிக்கை உணர்வு', 'தளர்ச்சியற்ற முயற்சி உணர்வு' ... முதலியனவற்றை ஊற்றெடுக்கும்படி செய்யும் பெருமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். இம்முயற்சியில் எல்லா அரசியல் இயக்கத்தினரையும், சமயப் பிரிவினரையும், சாதிப் பிரிவினரையும்... ஒன்று திரண்டு ஒற்றுமையோடும், பற்றோடும், பாசத்தோடும், உறுதியோடும், உரத்தோடும், உற்சாகத்தோடும் உழைக்க வருமாறு அழைக்கின்றோம்.**

1971இல் யாம் ஒளிவில் ஒடுக்கத்திலிருந்து வெளிப்பட்டு உலகியலில் கலந்து 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' கண்டு பணியாற்றத் துவங்கியதைக் கணக்கில் கொண்டு இப்போது 10.12.80 முதல் 15.12.80 முடிய நடைபெறும் நமது இயக்க மாநாட்டைப் பத்தாவது இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாடாக அறிவிக்கின்றோம். இப் பத்தாவது மாநாட்டின் மலராக வெளியிடப் படுவதே இந்த "அருளுலக அறிமுக அறிவுரை அஞ்சல்".

இந்த அஞ்சல், "பத்தாவது இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாட்டு அறிக்கை", "பெரியார் ஈ.வெ.ரா. ஓர் ஆத்திகத் தலைவரே!", "இந்துமதம் சங்கராச்சாரியாரின் சாதனையா?", "இந்து மதத்தின் விலை என்ன?", "வருங்காலத்தில் இந்துமதத்தின் நிலை என்ன?", "இன்றைய அரசியல்வாதிகளும் இந்துமதமும்", "இந்துமதம் ஓர் உலக மதம்", ... என்று பல தலைப்புகளிடப்படும் ஒரு சிறு நூலாக அச்சிட்டு வெளியிடப்படும் தகுதியினைப் பெறுகின்றது.

இந்தப் பத்தாவது இந்து மறுமலர்ச்சி மாநாட்டை முன்னின்று நடத்தும்:

1. அருள்மிகு சமயக் குரவர் சாழல்



ஆகிய 'சித்தர்நெறிக் குரவர் நால்வரும்' பெருமுயற்சி செய்து, புதிதாகச் சேர்ந்துள்ள அடியான்களையும் பயன்படுத்திப் பல நகல்கள் எழுதுங்கள். அவற்றை மாநாட்டுக்கு வருபவர்களுக்கும், செய்தித் தாள்களுக்கும் வழங்கலாம்.

இந்த அஞ்சல் புதிதாகச் சேரும் எல்லா அடியான்களுக்கும், அடியாள்களுக்கும், அடியார்களுக்கும் ஆரம்பக் கட்டத்தில் வழங்கப் படும் மரபு இம்மாநாடு முதலாகத் தொடங்கட்டும்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்
திருவுள ஒப்புதலும் குருவாணையும்
வழங்கப்பட்டு அனுப்பப்படும் அஞ்சலிது.

குருமகாசன்னிதானம் சித்தர் கருவூறார்
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி
அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார்

<u>குறிப்பு:</u>

இந்த அஞ்சலின் நகல் எல்லாச் சித்தரடியான்களின் கோப்புக்களிலும் வைத்துக் காக்கப் படல் வேண்டும்.

====================

இந்தக் கட்டுரையில் குருதேவர் குறிப்பிட்டுள்ளது போல இதனைப் பெறும் ஒவ்வொருவரும் இந்த நகல் கிடைத்த ஒரு வாரத்திற்குள் இதற்குக் குறைந்தது ஒன்பது (9) நகல்களாவது (xerox copy) தயாரித்துத் தங்களுக்குத் தெரிந்தவர்கள் அனைவரிடமும் படிக்கக் கொடுக்க வேண்டும்.



BOOK-POST

*<u>If undelivered please return to:</u>*
**Forum of Siddharadiyaans**
C/o Mr. V.Muniraju
Door No.345, Bellandur Post
Outer Ring Road,
**Bangalore East 560103**
**Cell:** 09972130609

**To**